# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**<u>'பெண்களுக்கு வலிமை, ஆரோக்கியமான எதிர்காலம்'<br>என்ற கருப்பொருளின்கீழ் சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாடும்<br>இந்திய உயர் ஸ்தானிகராலயம்</u>**

2025 ஆம் ஆண்டு சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாடும் முகமாக, கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் கலாசாரப் பிரிவான சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம் (SVCC), பெண்களின் நல்வாழ்வு, அதிகாரமளித்தல் மற்றும் தற்காப்பு விழிப்புணர்வு ஆகியவற்றை ஊக்குவிக்கும் தொடர் நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளது.

2. வெள்ளவத்தை சைவ மங்கையர் வித்தியாலயத்தில் இடம்பெற்ற உடற் பயிற்சி (PT) அணியினரின் நிகழ்வுகளுடனான விளையாட்டு நிகழ்வுகள், மிலாகிரிய புனித போல்ஸ் மகளிர் கல்லூரியில் 300 மாணவிகள் பங்கேற்ற தனிப்பட்ட பாதுகாப்பு பயிற்சி உள்ளிட்ட நிகழ்வுகள் இந்த முயற்சிகளில் அடங்குகின்றன. சமச்சீரான போஷணையின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் வகையில், 'பெண்களின் ஆரோக்கியத்தில் ஊட்டச்சத்தின் பங்கு' என்ற தலைப்பில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவ பீடத்துடன் இணைந்து சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம் 'பெண்களிடம் அதிகாரமளித்தலுக்கான யோகா' அமர்வையும் ஒழுங்கமைத்திருந்தது.

3. பெண்களுக்கு அதிகாரமளித்தலுக்கான உறுதிப்பாட்டைத் தொடர்ந்து, உள மற்றும் உடல் ஆரோக்கியத்தினை ஊக்குவிக்கும் வகையில், பிரம்ம குமாரிகள் இராஜ யோக நிலையத்துடன் இணைந்து 'பெண்களுக்கு அதிகாரமளித்தலுக்கான யோகா' அமர்வொன்றும் சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தினால் ஒழுங்கமைக்கப்படும்.

4. 'பெண்களுக்கு வலிமை, ஆரோக்கியமான எதிர்காலம்' என்ற கருப்பொருளின் கீழ், பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட வலுவான இந்தியா திட்டத்துடன் இணைந்ததாக இந்த தொடர் நிகழ்வுகள் காணப்படுகின்றன. இந்தத் தொடர் பல்வேறு அமைப்புகளுடனான பங்குடைமை மூலம் உடற்தகுதி, உள நலம், போஷணை மற்றும் சமூக உள்ளடக்கத்தை மேம்படுத்துவதை ஆதரிக்கிறது. இந்த முயற்சிகள் இந்தியாவிலும் அதற்கு அப்பாலும் பெண்கள் தலைமையிலான அபிவிருத்தியின் தொலைநோக்குப் பார்வையை தொடர்ந்து வலுவாக்குகின்றன.

*****

**கொழும்பு**
**07 மார்ச் 2025**